**பண்டாரகம பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 14 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 28 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பண்டாரகம பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறைப் பொறுப்பின் கீழ் மீளச் செலுத்த வேண்டிய வைப்பு மீதியில் பெறுமதி சேர் வரியாக ரூபா 329,555 தொகையான வரவு மீதி செலுத்த வேண்டிய வைப்புகளில் செலவு மீதிக்கு பதிவளிக்கப்பட்டிருந்தமையால் நடைமுறைப் பொறுப்பு அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கையில் உள்ள இருப்பில், மின்சாரம் களஞ்சிய இருப்பில் ரூபா 33,704 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்பு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் இருப்பு இறுதி இருப்பிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது மாகாணம் குறித்த அபிவிருத்தி வழங்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய ரூபா 352,052 தொகை 2015 சனவரி 23 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும் இப் பெறுமதி மீளாய்வாண்டின் கைத்தொழில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதியில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபை நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதி கடன்கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 64,902 தொகையான பணம் செலுத்த வேண்டியதாக கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக அதே தொகையால் கடன்கொடுத்தோர் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய கைத்தொழில் கடன்பட்டோர் பட்டோலையின் மீதியான ரூபா 103,060,750 பெறுமதிக்கு கிடைக்க வேண்டிய கைத்தொழில் கடன்பட்டோர் பேரேட்டு மீதியைச் சமப்படுத்துவதற்காக ரூபா 4,456,548 தொகை பெறவேண்டிய கைத்தொழில் கடன்பட்டோர் பேரேட்டுக் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதி செலவு வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு ஆண்டின் போது கைத்தொழில் மானியமாகப் பெறப்பட்ட இத் தொகை இனங்காணப்படாது பேரேட்டுக் கணக்கில் இருந்து பதிவளிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான நிலையான வைப்பு வட்டியாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 4,053,465 தொகை மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(எ) நீர்க் குழாய் ஸ்தாபிக்கப்படுகையில் வீதியைப் பழுதுபடுத்தியதற்காக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 1,329,612 தொகையிலிருந்து அவ் வீதி திருத்தப்படாது சேவைக்கான கட்டணம் வருமானத்தின் கீழ் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) 2013 ஆம் ஆண்டில் மாகாண சபையில் இருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 3,178,457 தொகையான கப் வண்டிக்காக தவணைப்பணமாகச் செலுத்தப்பட்ட பெறுமதியான ரூபா 1,765,680 தொகையான பணம் மாத்திரம் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனச் செலவினத்திற்கு வருமானத்தில் இருந்தான பங்களிப்புக் கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் மொத்தப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 1,412,777 தொகையால் நிலையான சொத்துக்களிற்கும் மூலதனச் செலவினத்திற்கு வருமானத்தில் இருந்தான பங்களிப்புக் கணக்கு அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஐ) மேற்குறித்த சொத்தின் மொத்தப் பெறுமதியான ரூபா 3,178,457 தொகையான பணம் அறவிடப்படக் கூடிய பயன்பாட்டுச் சேவைகள் கணக்கு வரவு வைக்கப்பட்டு மாகாண சபை கடன் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன் அக் கணக்கில் இருந்து செலுத்தப்படும் மொத்த தவணைப் பணமான ரூபா 1,765,680 தொகை பெறுமதி குறைக்கப்பட வேண்டும். இதன் படி, பயன்பாட்டு சேவைக் கணக்கினதும் மாகாண சபை கடன் கணக்கினதும் மீதி ரூபா 1,412,777 தொகையாக இருக்க வேண்டிய போதிலும் பயன்பாட்டு சேவைக் கணக்கில் இது ரூபா 3,178,456 ஆக பதிவு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 1,765,679 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

விபரமான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 24,733,708 கூட்டுத்தொகையான 7 கணக்கு மீதிகள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 22,362,074 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,295,262 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீத வரி | 3,666 | 3,367 | 2,846 |
| ஏக்கர் வரி | 6 | -- | 28 |
| கைத்தொழில் வரி | 687 | 753 | 137 |
| வியாபார வரி | 2,524 | 2,542 | 436 |
| வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் | 157 | 175 | 32 |
| குத்தகை வாடகை | 578 | 619 | 502 |
| விநோத வரி | 30 | -- | - |
| கடை வாடகை | 722 | 687 | 226 |

#### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 6,326,484 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 30,351,039 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 1,455,576 தொகையான நிலுவையான ஓய்வூதிய சம்பளப் பங்களிப்பு 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த ரூபா.2,382,114 தொகையான வைப்புத் தொடர்பாக அரசாங்க நிதிப் பிரமாணம் 571 இன் விதிப் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 ஆம் 2007 ஆம் ஆண்டுகளின் போது வீதி சேதப்படுத்தியமைக்காக வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 22,000 தொகை உரிய பணி நிறைவேற்றப்படாது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) போதியளவில் சபையிடம் காணப்பட்ட கதிரைகளும் கூடாரங்களும் இருக்கையில் 5 சந்தர்ப்பங்களின் போது ரூபா 152,500 தொகை செலவிடப்பட்டு தனியார் நிறுவகம் ஒன்றிடம் இருந்து வாடகை அடிப்படையில் கூடாரங்களும், கதிரைகளும் மின்குமிழ்களும் பெறப்பட்டிருந்தன.

### 3.3. முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) 2005 யூன் 27 ஆம் திகதிய 1399/ 5 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் 4(அ) இன் விதி இல. 3 இன் பிரகாரம், தலைவர், உப தலைவர் அல்லது உறுப்பினரால் மருத்துவ காரணம் தவிர சபையின் அங்கீகாரத்தில் லீவு பெறப்பட்டிருக்கையில் படிப்பணத்திற்கு உரித்தற்ற போதிலும் வரவுப் பதிவேட்டில் வருகை தரவில்லை எனப் பதிவு செய்யப்பட்டிருந்த உறுப்பினர்களால் 2014 ஆம் ஆண்டின் சனவரி முதல் திசெம்பர் வரை உறுப்பினர் படிப்பணமாக ரூபா 231,500 பெறப்பட்டிருந்தது.

(ஆ) 2000 யூன் 02 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் (மேமா) LG /04/2000 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி, சபைத் தலைவரினதும் உப தலைவரினதும் தொலைபேசிப் பட்டியல்களைத் தீர்ப்பதற்காக மாதாந்தக் கொடுப்பனவுகளின் எல்லை முறையே ரூபா 3,000 தொகையாகவும் ரூபா 2,500 தொகையாகவும் இருந்த போதிலும் இவ் எல்லைகள் மீறப்பட்டு தலைவருக்கு ரூபா 6,920 தொகையும் உபதலைவருக்கு ரூபா 10,612 தொகையும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சபைக்காக பல்வேறு நிறங்களில் 200 கொடிகள் தயாரிக்கப்படுவதற்காக ரூபா 158,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 3 விலைக் கோரல்கள் கோரப்பட்டிருந்த போதிலும் கொடியின் வகை, கொடியின் நீளம், அகலம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. பொறுப்பேற்கப்பட்ட கொடியின் எண்ணிக்கை, பொறுப்பேற்ற திகதி பதிவுசெய்யப்பட்டிராததுடன் பொருட் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 வாகனக் கட்டுப்பாடு**

(அ) 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், சபையிடம் உள்ள சகல வாகனங்கள் தொடர்பாகவும் 6 மாதங்களிற்கு ஒரு முறை எரிபொருள் பயன்பாடு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆகஸ்ட் 22 ஆம் 2015 மார்ச் 02 ஆம் திகதிகளில் விபத்து நேர்ந்த 2 வாகனங்களிற்காக பழுதுபார்த்தல் செலவினமாக ரூபா 82,010 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக காப்புறுதி நட்டஈடு பெறப்பட்டிருக்கவில்லை.

**3.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

i 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் படி 11 செலவின விடயங்களிற்காக ரூபா 3,960,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் இதில் எந்த தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

ii. 13 செலவின விடயங்களிற்காக ரூபா 5,670,000 தொகையான ஏற்பாடு உரிய பணி மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக வேறு செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்